உ

சிவமயம்.

ஆலங்குடிச்

சோஸலவிநாயகர்

காவடிச்சிந்து.



இஃது

நாச்சியாபுரம்

ஸ்ரீ. கறுப்பன் செட்டியார்

குமாரர்

ஸ்ரீ. முத்தைய செட்டியார்

இயற்றியது.

யாழ்ப்பாணம்,

"நாவலர்" அச்சுக்கூடம்.

1911.

உ

சிவமயம்.

ஆலங்குடிச்

சோமஸவிநாயகர்

காவடிச்சிந்து.

இஃது

நாச்சியாபுரம்

ஸ்ரீ. கறுப்பன் செட்டியார்

குமாரர்

ஸ்ரீ. முத்தைய செட்டியார்

இயற்றியது.

யாழ்ப்பாணம்,

"நாவலர்" அச்சுக்கூடம்.

1911.

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

மகிபாலன்பட்டி

ஸ்ரீ. குமர. மு. கதிரேசச்செட்டியார்

கூறியது.

வெண்பா.

சொல்லாரு மாலநகர்ச் சோலை விநாயகர்க்கு
நல்லார்சொ ஞச்சி நகர்வாழ்வோன்—பல்லாரும்
போற்றுகறுப் பண்ணன் புதல்வன்முத் தையனன்கு
சாற்றுசிந்து வாழ்க தனி.

யாழ்ப்பாணம், வண்ணைநகர்,

ஸ்ரீ. க. வைத்தியலிங்கபிள்ளை

கூறியது.

விருத்தம்.

வடநகர்வாழத்திவதனப்புத்தேடனக்குயர்காவடிச்சிந்தோதிப்
புடவியுளோரள்ளெனும்வாய்மடுத்தருந்தப்போற்றினன்வாளைபூக
மிடறொடியவுகள்வயல்சூழுஞ்சிநகர்க்கறுப்பணவேள்விரும்பிநோற்ற
அடறவத்தால்வந்துதித்தமுத்தயமாலருங்கவிசொலன்பனன்றே.

ஸ்ரீ. வன்றொண்டர் மாணக்கருளொருவராகிய

நாச்சியாபுரம்

ராம. வெ. ராம. ராமநாதஞ்செட்டியார்

இயற்றியது.

விருத்தம்.

ஆலநகர்ச்சோலைவிநாயகற்கணிந்தான்
செந்தமிழ்ச்சிந்தவன்யாரென்னிற்

2

சிலமுயர்நாச்சிநகர்சிறப்புறவாழ்
வணிகர்குலதிலகன்றென்சொ
ஞூலறியுநுண்மதியான்விண்மதிநேர்கறுப்
பணமாஞேற்றநோன்பாற்
பாலனெனவவதரித்தமுத்தையப்பேர்ச்சித்த
சன்றேர்பாவலோனே.

உ

சிவமயம்.

சோலைவினாயகர்

வருகைப்பதிகம்.

காப்பு.

வெண்பா.

எத்திசையும் போற்று மெழிலால மாநகர்வாழ்
அத்திமுக னேசோலை யைங்கரனே—பத்தியுடன்
செந்தமிழி னாற்பதிகஞ் செப்புதற்கென் சிந்தைதனில்
வந்துவரந் தந்தருளு வாய்.

நூல்.

சீலன்வருகயானைமுகச்செல்வன்வருகசிவனருளும்
பாலன்வருகவல்லைபதன்பதியேவருகவிளங்குதண்டைக்
காலன்வருகவேனல்வருங்கயமேவருகவுயர்மதில்சூ
ழாலநகர்வாழ்சோலைவினாயகனேவருகவருகவே. (௧)

மெய்யன்வருகமுத்தர்தவம்வேண்டவருவோய்வருகதுதிக்
கையன்வருகவாலநகர்க்கர்த்தன்வருகவித்துரும
மெய்யன்வருககைலையினைமேவமுதியோடனையனுப்பு
மையன்வருகசோலைவினாயகனேவருகவருகவே. (௨)

நம்புமடியர்க்கருள்பரமநாதன்வருகநலிவுசெயுந்
துன்பமெவையுந்தீர்த்தருளுந்துரையேவருகதுதித்தறியா
வம்பனையுமாட்கொள்ளவருகவாலநகர்மேவு
மன்புவருகசோலைவினாயகனேவருகவருகவே. (௩)

தேனேவருகவானமுதத்தெளிவேவருகதெய்வமெலாந்
தானாய்விளங்குமறுமுகன்சோதரனேவருகபிரணவத்தின்
கோனேவருகவாலநகர்க்கோவேவருகவெப்பொருளு
மானாய்வருகசோலைவினாயகனேவருகவருகவே. (௪)

சோதிவருகவடியர்குழாந்துதிக்கவருவோய்வருகவுமை
பாதிதிகழும்பரசிவனார்பாலன்வருகபரவுமனு
நீதியுடையார்க்கருள்சுரக்குநித்தன்வருகவாலநகர்க்
காதிவருகசோலைவிநாயகனேவருகவருகவே. (ரு)

கண்ணேவருகசித்திபுத்திகணவாவருககருதுமன்ப
ரெண்ணேவருகவெப்பொருட்குமிறையேவருகவிதழியொடுந்
தண்ணார்மதியமுடித்தசடைத்தலைவாவருகவாலநகர்க்
கண்ணாவருகசோலைவிநாயகனேவருகவருகவே. (சு)

சித்தாமணியேவருகமகாதேவாவருககங்கையுமை
மைந்தன்வருகமாமறையோர்வாழ்த்தவருவோய்வருகவொற்றைத்
தந்தன்வருகநினைமறந்துதயலார்முயக்கால்மயலானே
னந்தோவெனையாள்சோலைவிநாயகனேவருகவருகவே. (எ)

மணியேவருகசுரர்துதிக்கும்வள்ளால்வருகவடியர்பவப்
பிணியேதுடைத்துவீடருளெம்பெருமான்வருகபிறங்குதவப்
பணியேபுரிவாருள்த்தமரும்பரமன்வருகவாலநகர்க்
கணியேவருகசோலைவிநாயகனேவருகவருகவே. (அ)

கமலாசனத்தாரயன்முதலோர்காணற்கரியாய்வருகவுமை
குமராவருகநிறைந்தவருட்குன்றேவருககுணங்கடந்த
நிமலாவருகபவமறுக்குநித்தன்வருகவாலநக
ரமலாவருகசோலைவிநாயகனேவருகவருகவே. (கூ)

சித்தன்வருகநான்மறைச்செஞ்சிலம்பன்வருகவிளங்குபர
முத்தன்வருகவாலநகர்முதல்வன்வருகவிதையபரி
சுத்தன்வருகபுனல்நிறையுஞ்சோலாண்டாறருணிக்கரைவாழ்
அத்தன்வருகசோலைவிநாயகனேவருகவருகவே. (கo)

சோலைவிநாயகர்.

ஊசல்.

தங்கமதாற்சமைத்தவிருதூண்களநாட்டித்
தனிவயிரத்தாலிணைத்தவிட்டம்பூட்டி
மங்கலிலாமரகதத்திற்பலகைநகூட்டி.
மன்னுமுத்தங்கோவையிட்டவட்டங்கள்மாட்டி
திங்களைநேர்முகமடவார்வடந்தொட்டாட்டச்
சித்திபுத்தியிருபால்தஞ்சிறப்பைக்காட்டத்
துங்கமிகுமாலநகர்க்கணியாய்மேவுஞ்
சோலைவிநாயகசுமுகராடீரூசல். (க)

தந்திமுகப்பொலிவுமணிமுடியுந்திங்கள்
தயங்குமொருமருப்பும்வெண்ணீறிலங்குமார்புந்
தொந்தியகடுங்கருணைவிழியும்பாசத்
தொடரறுக்குமங்குசவேர்க்கரமும்பொன்னூர்
பந்துமுலைமாதரிருபாலுமோங்கும்
பத்திரமுநாயடியேன்பணிந்துபோற்றச்
சுந்தரஞ்சேராலநகர்க்கணியாய்மேவுஞ்
சோலைவிநாயகசுமுகராடீரூசல். (உ)

மாயையெனுநார்ஞலேபிணித்துமோக
வாரியிலேவீழ்த்திமடிவிப்பாரந்தப்
பேயர்களைவரையிறுத்தகொம்பாற்குத்திப்
பிளந்திடுதனுமக்கரிதோபெரியாயார்க்குந்
தாயனையீர்மாங்கனிக்காய்வேலோனுணச்
சங்கரனைவலம்வருவோய்சனனநீக்குந்
தூயவனேயாலநகர்க்கணியாய்மேவுஞ்
சோலைவிநாயகசுமுகராடீரூசல் (ங)

பில்லிசூனியமேவல்மாடன்காளிப்
பிரமராக்ஷஸிமுதலாம்பேய்களென்னைச்
சல்லியஞ்செய்யாதருள்வீரமரக்காகக்
தந்திமுகத்தவுணன்விழச்சாய்ப்பானெண்ணி
எல்லையிலாவொளிப்பிறையாமதியம்போலு
மெயிறிறுத்தபோர்வீராவெங்கோமானே
சொல்லரியவாலநகர்க்கணியாய்மேவுஞ்
சோலைவிநாயகசுமுகராடீரூசல். (௪)

அக்கவடம்பூணைந்துநமச்சிவாயவென்ற
வைந்தெழுத்தையுண்ணினைந்துநீறுபூசி
புக்கவடமென்றுன்றளியைமேவிநாளும்
பூசைபுரிந்துருகிவிழிபருவிபாயும்
பக்குவமென்றளித்திடுவீரடியார்போற்றும்
பரம்பொருளேயாலநகர்க்கணியாய்மேவுஞ்
சொக்கலிங்கர்முதற்குமரராடீரூசல்
சோலைவிநாயகசுமுகராடீரூசல். (௫)

காவடிச்சிந்து.

தலைவன் தலைவிக்குரைத்தல்.

கலிவிருத்தம்.

ஆலமாநகர்தன்னிலமர்ந்திடுஞ்
சோலையைங்கரன் றன்னைத்துதிசெய்து
பாலர்காவடிசேர்க்குநற்பான்மையைச்
சீலவஞ்சியேசெப்புவன்கேட்டியால்.

இந்தப்—பூமிபுகழ் சோலைக்கணேசன்-அளகை
போலுநவநிதி மேவுமாலநகர் வாசன்

நெடு—நேமியான் கமலைத்திருமருகன்-கைலை
நேயற்கு முதன்மையுறுபாலனு மொருவன்

தம்மைத்—துதிசெய்ய வருள்புரியுநேசன்-சிரசிற்
றன்னுநவ ரத்னமுடிமின்னும் பிரகாசன்

மூன்று—மதியினைப் பொருவுமொருமருப்பன்-ஆழி
மாயனும் போற்றுகை லாயவரைவிருப்பன்

மத்—மாதங்க மாமுகசொரூபன்-ரத்ன
மாணிக்க மாலைபுனை யாணிப்பொன் மார்பன்

வெள்வி—பூதியணி வித்துரும நிறத்தான்-தகுவர்
போரஞ்சி வாடாத வோரஞ்சு கரத்தான்

சத்தி—வேலர்க்கு முன்வந்த தீரன்-பூணூல்
விதரணம் பொருந்து பேருதர சிங்காரன்

எழு—ஞாலத்தி லெவர்கட்கும் வெருவான்-தம்மை
நாடுமடியர்க்கு மகிழ்வோடுவரந் தருவான்

நம்—சித்திபுத்திக் கரியநேயன்-யார்க்குந்
தெளிவாக வுபதேச மொழியுநால் வாயன்

தாங்கித்—தத்துமூடிக வையமுடையான்-அணியுந்
தண்டை சிலம்பிசை பாடிக்கொண்டுவரு நடையான்

கூர்—அங்குசமேந்து மெமதையன்-வன்னி
யறுகிடைதொடுத்த பைந்தெரியலணி துய்யன்

போங்கு—மங்கலகல்யாண குணநீதன்-என்றும்
வணங்குவோர்தம்மை யனுதினங்காத்த நாதன்

இவ்—ஐங்கரனைப்பணிந்து சிந்தோத-முக்க
ணப்பனையுந் தொழுது துதிசெய்து திருப்பாத

ஈசன்—பங்கயந்தன்னை முடியேற்றி-யிமைய
பருவதப்புதல்வி தனதிருபதம் போற்றி

பால்—ஆழியிற்றுயில் மாயனெம்மை-என்று
மாட்கொள்ளுந் தாய்கமல மீக்கொள்ளு மம்மை

நெடிய—கோழிப்பதாகை தொடும்வேலன்-தெய்வ
குஞ்சரியுங் குறமாது வஞ்சியர்கள் லோலன்

இவ்வூர்—உலகநாயகி யிவரைத்துதித்து-சிருஷ்டிக்
கோர்முதல்வனை வயன்சீர் நாவைமதித்துக்

கவினூர்—திலகமென வுறைபநுவலாட்டித்-தாயைத்
தினமுமறவா தெந்தன்மனமேவ நாட்டி

நாளு—முத்தமிழ்சொல் கவிவாணர்ப் போற்றி-பொதிய
முனிபெரும் புகழையே நனிமகிழ்விற் சாற்றி

பரி—சுத்தமுறுமால நகர்வளந்தான்-நாடிச்
சொல்லுகற் கஞ்சுதடி வல்லியென் னுளந்தான்

வை—வேலினை நிகர்த்த கூர்விழியாய்-கண்டை
வென்றமிர்தமிது வென்னநின்றதே மொழியாய்

சிறந்த—கோலமிகு செய்யபட் டுடையாய்-நன்மை
கொண்டகதலித் தண்டைவென்ற விருதுடையாய்

நெடிய—கூந்தலாலிரவு தனைவென்றாய்-புருவங்
கோல்கொண் டடர்த்ததனுப் போலிம்பர் நின்றாய்

மிகு—காந்தியுடன் மின்னுமின்னிடையாய்-வாவிக்
கரையதனிலே யுலவுநரையன்ன நடையாய்

பூர்ண—மதியத்தைவென்ற திருமுகத்தாய்-யென்று
மங்காத சிவஞானந் தங்குபேரகத்தாய்

தேர்ந்து—விதியோர்ந் தெடுத்தவோ ருருவே-யோகம்
வீட்டியே முனிவர்விழி நாட்டுபூந் திருவே

மேரு—வெற்பெனத் திரண்டவிரு குயத்தாய்-தவத்தை
வெல்லு மரவப்படத் தல்குலினயத்தாய்

வரையுஞ்—சிற்பருக் கரியவடிவாளே-யிவ்வூர்ச்
சீரதனை யான்சிறிது கூறுவேன் கேளே

வேணி—கலைமகளெனக்கார் நடித்து-சத்த
கடல்நீரை மொண்டுதன் னுடல்வீறக் குடித்து

விசும்பில்—மலைமகள் சொரூபமெனத் தாவி-சண்ட
மாருதத்துடனூர வாரித்து மேவி

சேர்ச்சித்—அண்டமுகடதிர்தர விடித்து-தேவ
ரஞ்சியே யோடவொளி விஞ்சத்தடித்து

சிறந்த—தொண்டரென்றும் பூசைபண்ணித்-துதிக்கும்
சோலைநாயகன் கருணைபோலவே நண்ணி

யிந்தப்—படியதனில் மழைமாரி சொரிந்து-அந்நீர்
பரிவாக நதிகள்முக நெறியாய் விரிந்து

பயிர்செய்—குடிகள்மன தானந்தம் பொழியச்-சென்று
கூவம்வய லேரிகுள மேவியே வழிய

செந்நெல்—முப்போகம் விளையுநன்றுடு-இந்த
மூவுலகி லெவ்வுலகு மேவுமிதற் கீடு

நூலோர்—விப்பிரர்கள் வீதியிது மானே-நான்கு
வேதமனுதினம் பாடமோதுவது தானே

இவைதாம்—மன்னவர்கள் பொன்னின் மாடங்கள்-ஒருபால்
மன்னியவர் சபைகூடுஞ் சொன்னபீடங்கள்

என்றும்—நன்னெறி வழாவணிகர் மனையும்-எந்த
நாளும்வாழ்ந் தோங்குவேளாளரகந் தனையு

பெண்ணே—அன்னசத் திரங்களும் பாராய்-இங்கே
அரனடித் தொண்டர்நிதம் வருவார்கள் சீராய்

பாருஞ்—சொன்னமய மாய்ச்சமைத்த கோயில்-இதிற்
றன்னுமுயருலகம்மைசந்நிதிமுன் வாயில்

கமலை—நாதனுக்கே பூசையிட்டு-ஆடு
நாடகங் கண்டரியைத் தேடிக்கும் பிட்டு

திங்கள்—வேதனைகள் தீருமெனப் புகழ்வார்-சந்தி
வீரனுக்கே நலங்கோரி மனமகிழ்வார்

யிந்த—மதகஜயம்மன் வெகுகீர்த்தி-அவட்கு
மாசனம் பொங்கலிடு நேசம்வெகு நேர்த்தி

யிந்த—உலகமதி லிவட்கீடுமிலையே-அந்த
வல்லாசி மகிமையினைச் சொல்லவெகு மலையே

பூங்-கன்னலில் வெண்முத்த நிரைதோணும்-அதனைக்
கண்டுமதியீடாகோ மென்றுமுகம் நாணும்

யெங்கும்—நன்னலஞ் செறிமலர்ச் சோலை-தன்னில்
நாடரியவஞ்சுகம் பாடுமனு நூலை

பெண்ணே—புன்னைகளுங் கோங்குமிக வளரும்-அதில்நற்
பூவையொடு பைங்கிளிக ளோவாது கிளரும்

பசிய—வன்னநிற மாங்கனியுகுக்கும்-வரி
வண்டுகளிருந் திசைகள் கண்டெனவுகுக்கும்

செங்—கஞ்சமல ரோடையினை நாடும்-அன்னம்
காடையினம் பேடையொடு கூடிவிளையாடும்

ஆடும்—பஞ்சரச்சிட்டுக ளோர்சோடாய்க்-ககனம்
பார்த்துவரு மாந்தெய்வ பட்சிகளுக்கீடாய்

பேடையைக்—கொஞ்சிவிளையாடும் வான்கோழி-பற்றக்
கூடிவரும் வேடுவர்கள் பாடுவார்வாழி

நாளும்—மிஞ்சிவருமயில் நடனமாற்றும்-இஃதே
விண்ணுலக மென்றுசுரர் கண்ணுக்குத் தோற்றும்

மாடப்—புறவுமுயர் மாளிகையிற் றுவும்-மற்றைப்
புள்ளினங் கூடிநம் பள்ளியெனமேவும்

வெங்கட்—சுறவினம் நீர்கிழியச் செல்லும்-கோடி
சோதிமிகு நவமணியின் சாதியதிற் புல்லும்

பசுப்பால்—கன்றுண்ணக் கோவது தடுக்கும்-புலியுங்
கண்டுசகியாது தன் மண்டுபால் கொடுக்கும்

முன்னே—நின்றுடியைப் பூசைபார்க்கும்-சிகரி
நீடிகுளை போலவத னேடுருவை நோக்கும்

சாலக்—கவிகள்பல வின்கனியை யெறியு-மந்தி
கண்டதனை யேந்தியே யுண்டுருசி யறியும்

சேன்று—செவிகளிற் பிரணவங் கூறும்-கரிபார்
சென்றபுலி நங்குரவ னென்றுள்ளந் தேரும்

பசுங்—கோலமலர் சூடிமென்மானே-தென்னர்
கூடியே யுறைபாண்டி நாடதனிற் ரூனே

இந்த—ஆலநகர்ப் பதிநல்ல பதியே-யிங்கு
அனுதினமு முறைசெய்வர் கணபதியின் றுதியே

பலநூய்—துதிசெய்யுங் கணபதிக்கின்று-அன்பு
சொரிவதற் கெதுவிரத மறிவீர்களென்று

தேரு—மதியிலுய ரனைவோரு மொன்றாய்க்-கூடி
மன்னுகாவடிகளெடு மென்னவேநன்றாய்

அப்பன்—சேவடிபணிந் தன்புகொண்டு-உயர்
சித்திராபவுரணையு மெத்தநல மென்று

செல்வக்—காவடியெடுக்க மனம்நாடிச்—சிறப்பக்
காரியஸ்தனையிநதப் பார்முழுதும்தேடி

தேடிக்—கூட்டிவந் திதனையு முரைத்தார்-அவனுங்
கூறியபொன் னவமணியை வாரியென நிரைத்தார்

செய்போன—நீட்டியதண் டாயுதமு நீட்டி-மூன்றாந்
திங்களெனவுயர் மார்றுத் தங்கவளை மாட்டி

அதற்கு—இருபுறமும் பொற்பலகை பூட்டி-யதனி
லெத்திசையும் புகழுநற் சித்திரமுங் கோட்டி

சோல்லந்து—அரியபொற் கம்புகளிசைத்து-மேலே
அழகுநிறைபன்னுங் குவளமை பெறவசைத்து

கட்டும்—பந்தமயி லிறகிளொளி நீட-சித்ரப்
பஞ்சவருணப்பட்டுக் குஞ்சங்களாட

பார்வைக்கு—அந்தமிகுங் காவடிகள் பண்ணி-சிற்பி
யகலவும் பருவநாள் புகலவதை யெண்ணி

அன்பாய்—மூன்றுநாள் விரதமு மிருந்து-பருவ
முன்னுகச் சதுர்த்தசியும் நண்ணுவ தறிந்து

அங்கே—தோன்றுமா லடிபரவியேத்தி-யவர்தம்
தூயசந்நிதியில்வைத் தோயாதுவாழ்த்தி

போன்செய்—அங்கலசமதிற் பளிதம்வாத்து—அதற்
கண்டயாளஞ் செய்துகா வடிதனிற் கோத்து

வர்க்கப்—பொங்கல்நெய் வேதனமதாற்றி-அன்பாய்
போற்றி யரகரவென்று தோத்திரஞ் சாற்றி

தத்தம்—மாளிகைக் கேகினாரன்று-கங்குல்
மயமாக வெல்லோருஞ் சயனித்தாருண்டு

புகழ்ந்து—வாழியது மறையோர்கள் கூறிச்-சூழ்ந்து
வருகவே மணியினொளி பெருகுரதமேறி

விரைவிற்—பவுரணையும்வந்த தடிமானே-அருக்கன்
பார்க்கவே கீழ்த்திசையை நோக்கிவந்தானே

அன்பர்—அவரவருங் காலைதுயில் விண்டு-துறவ
ரருந்தவர்க ளோடுமுயர் நறுந்தடஞ்சென்று

பரி—சுத்தநீராடிப் பொற்கெண்டை-யிட்ட
சோமனு முடுத்துவிற் காமனென நின்றே

மிகு—பத்தியுடன் திருநீறுபூசி-வெகு
பண்பான சிரசேறு வெண்பட்டுங் காசிப்

மின்னும்—பட்டொட டரைஞாண் கெவுரிசங்கம்-கெவுடும்
பாங்கானமோதிரமு நீங்காமற் றங்கும்

வயிர—ஒட்டுக்களொடு பட்டைக்காப்பும்-அணிந்த
ஒப்பனையுந் துதிகள்பல செப்புகிற வார்ப்புந்

நானும்—என்னென்று சொல்லுவேன் மன்னே-அன்ப
ரெல்லாரும் பொற்புற்ற வல்லாசந்தனை

வேண்டு—நன்னிதியந் தருமாலைப் பணிந்து-வைத்த
நயமிகுங் காவடியைப் புயமீதணிந்து

ஒயிலாய்—ஆடினாரன்பர்க ளன்றேளே-சோலை
யைங்கரக்கடவுளிரு பங்கயத்தாளே

முடியிற்—சூரனானந்தங் கொண்டார்-கூடிச்
சுற்றிவிளை யாடியரு ளுய்த்தவமு துண்டார்

இனிய—கோதில்சுர மேளமுமுழங்க-ஆதுங்
கொம்புகிடுபிடி முரசுபம்பொலி தழங்க

மகா—நாதமிகு பேரிகை யடிக்க-கற்ற
நாவலரு மதிமதுர காவியம் படிக்க

தவளச்—சங்குசேகண்டி கோஷிக்க அடியன்
சந்தமுடன் காவடியின் சிந்துவாசிக்க

கணிகை—மங்கையர்கள் நின்றுநட மாட-செங்கை
மாமலரினுலிருவர் சாமரைகள் போட

கைலே—அண்ணல்முழு வெண்மதியம் போலும்-குடையோ
டால வட்டம் சிவிறி யேலுமிரு பாலும்

சீர்சால்—விண்ணவரு மிம்மகிமை யறிய-வதிரும்
வேட்டுக்களு மிகுசத்தங் காட்டியே பறிய

மாலின்—கோவிலே வலமாக வந்து-வாளே
குதிகொண்டு விண்ணேகு மதிசயங்கண்டு

விண்மீன்—ஆவிதமோற வயலோடுஞ்-செயலா
லவ்வாளே யின்னங்கூடித் தவ்விவிளையாடும்

நாளும்—வற்ருத பொய்கையெனச் சொல்லும்-சீர்
வருணநீர் வயல்கட்குத் தருணமதிற்செல்லும்

வேத—வித்தார வோடையினைக் கடந்து-சூழும்
வேதியரக் ராரவழி நீதியாய் நடந்து

செய்ய—திருவுயரும் வணிகர்மனை நாடி-யந்தத்
தீதிலா ருறைராச வீதிவழி கூடி

பகர்தற்கு—அரியமைதான் வெளிவந்து-போற்றும்
அம்மைமத கடியாளே யுண்மையாய்ப் பணிந்து

அவளின்—துணையடித் தாளதனை வேண்டிக்-கொண்டு
சோலாண்டா னுருணியு மாலரகத் தாண்டி

சோலைக்—கண்பதிமுன் றிருவாயில் வந்து-அந்தக்
கத்தன்மா தங்கமுக நித்தனை யுவந்து

நாளும்—விளையுமன் பாற்றுதிகள் கூறி—யார்த்து
வீட்டினுர் வினையைவிண் ணோட்டினர்பூமாரி

மனது—கூளிகூர்ந்து பெய்தார்கள் மானே-சொற்ற
காரணங் களையின்னங் கூறுவேனுனே

புத்ர—சந்தானம் வேண்டுமென் பாரும்-நாளுந்
தருகுவாய் செல்வமது பெருகவென் பாரும்

பிதாவும்—எந்தாயும் நீரேயென் பாரும்-எமக்கு
ஏற்காது சகமாயை நீக்குமென்பாரும்

யாழ—மணம்புரியக் கண்பாரென் பாரும்-செய்யும்
வாணிபங்கூடி வரவேணுமென் பாரும்

வருத்துப்—பிணியதனைத் தீருமென்பாரும்-மறலி
பிடியாமலெம்முயிரைக் கடிபுரியென் பாரும்

துதித்து—எண்ணருமிக் குறைகூறிப் பின்னு-மும்மை
யேத்துவோ மெமையுங்காப் பாற்றுவாய் முன்னும்

முனிவர்—விண்ணவர்க் காகமுடி பத்தை-யுடைய
வேந்தனையும் வஞ்சித்த காந்தியொளிர் முத்தே

வரையிற்—கொம்பொசித் திதிகாசம் பொறித்தாய்-அவுணர்
கூட்டமற வேயடுபோ ரீட்டியுயிர் பறித்தாய்

தமக்கு—அன்பனென் றவ்வையை மதித்தாய்-சொல்லு
மகவலுக்கேக்கைகலே புகமுனம் விதித்தாய்

கானக்—குஞ்சரம் போலேனல் வந்தாய்-வள்ளிக்
குயிலாளை வேலனிரு புயமேவத் தந்தாய்

முனிபால்—வஞ்சனையி னீர்கெடப் புரிந்தாய்-பின்னு
மழைக்கால் போலனந்நீரைப் புழைக்கையாற் றந்தாய்

அன்று—வளவர்கோ னிடமூண் மடுத்தாய்-ஓர்நாள்
வல்லர்முறை யுறையுமிடம் சொல்லியே கொடுத்தாய்

நீங்காக்—களகமூர்ந் தரனைவலஞ் சுற்றி-யவர்கைக்
கனிவாங்கி யுண்டாயே யினிமையாய் நத்தி

தேவர்—கின்னேவழி பாடின்றிச் சென்ற-நுதலி
னேத்திரத் தோன்றேறை வீழ்த்திஞய் கன்ற

எவர்க்குந்—சொன்னசொல் மாருமற் காக்கும்-ஞானத்
தூலமே நிரையமதில் வீழாது தூக்கும்

சோலை—ஐங்கரக்கடவு ளேபோற்றி-மூவர்க்
• காந்தியே ஞானபரஞ் சோதியே போற்றி

நாளும்—எங்கள்குல தெய்வமே போற்றி-செக
மெத்திக்கும் போற்றுமயன் மைத்துனு போற்றி

சிவ—சங்கரன் றன்மகனே போற்றி-பரா
சத்திக்கு வாய்த்தநற் புத்திரனே போற்றி

நேமிச்—செங்கண்மால் மருகனே போற்றி-மகா
சீலனே யார்க்குமனு கூலனே போற்றி

கோடிய—அவுணர்குல காலனே போற்றி-தொந்தி
யையனே யடியவர்கள் மெய்யனே போற்றி

மகா—தவமுனிவர் நேயனே போற்றி-ஞான
தத்துவ முணர்த்துநல் வித்தகா போற்றி

அரிய—பிரணவ சொரூபியே போற்றி-குகற்குப்
பேருதவிபுரியவரு வாரணமே போற்றி

பொழியுங்—கருணைமத வாரியே போற்றி-மூத்தோர்
காணுதற் கரியமெய்ஞ் ஞானமே போற்றி

போற்றி—போற்றியுன் றிருப்பாதம் போற்றி-யின்னல்
போயகலு மென்றுதன் வாயார வாழ்த்தி

கோணத்—தோத்திரஞ் செய்துவலம் வந்து-பக்தி
சுரக்கின்ற காவடியை யிறக்கியே சென்று

தங்கள்—சென்னிமிசை மூன்றுதரங் குட்டிக்-கொண்டு
செவியீர்த் திறங்குமேற் குவியுங்கை கட்டி

யெம்மை—மன்னியுமென் றூர்கள்சூழ் பிட்டு-முத்ரை
மங்காத கலசமவிழ்த் தெங்கோன் முன்னிட்டு

பெரிய—அண்டாவிற் சர்க்கரையை வார்த்து-முறையோ
டஞ்சுவகை யுங்கூட்டிப் பஞ்சாமிர்தஞ் சேர்த்து

வரி—வண்டார்தேன் செவ்விளநீ ரோடும்-நறவு
வரைவிலா தானபல திரவியத் தோடும்

சோலை—அய்யனுக் கபிடேக மாட்டி-பார்வைக்
கலங்கார மாயங்கி துலங்கவே பூட்டி

யிந்த—வையக மதிக்கவுடை யணிந்து-அணிகள்
வண்மையாய்ச் சாத்திநற் பொன்முடி புனைந்து

மார்பிற்—துங்கவறு கின்பசிய மாலை-தானுந்
தோற்றவக டிற்புரளச் சேர்த்தனர் முன்னாலை

நுதலிற்—குங்குமப் பொட்டது குறித்து-அவர்முன்
குலவுமொரு தலைவாழை யிலையது விரித்து

சுய்யம்—மோதகம் பொரிகடலை யாசை-யான
முப்பழமு மவல்பயறு அப்பம்வடை தோசை

பொங்கற்—சாதமெள் ளுண்டைபணி காரம்-மேனி
தழும்பாத கிச்சிலியோ டெலுமிச்சை நாரம்

கழுமுள்—வெள்ளிலிலை யின்கனியுந் தேங்காய்-பாக்கு
வெற்றிலையுந் திருமுன்பு வைத்துவெகு பாங்காய்

யினிய—பள்ளையமதிட் டேநற்சூட-தீபம்
பார்க்கவிரு கரம்சிரசை நோக்கியே நீட

போற்றி—அரகர வென்றபடி யடியவர்கள் பணிந்து-சோலை
அய்யனருள் வெண்ணீறை மெய்யினி லணிந்து

அந்த—தருகின்ற பஞ்சாமிர்தம் வாங்கி-அவரின்
ருள்வேண்டிக் காவடியைத் தோண்மீதிற் ருங்கி

மனதுண்—மகிழ்ந்துதம் மாளிகைகள் சென்று-இன்னோர்
மைந்தர்மனை யாதிசுய பந்துகளோ டொன்டு

என்றுஞ்—சுகமுடன் வாழ்கவளர் மதியே-போலச்
சொல்லரிய வாழ்வீன்ற வல்லகண பதியே

காலை—சூரனெழு முன்னர்துயில் நீத்து-அங்கந்
துலக்கியே மனதையயல் விலக்காது துதித்து

இந்தப்—பாரதனில் நமஸ்காரம் புரிவார்-இம்மைப்
பலனடைந் தேமுத்தி நலமதனைப் பெறுவார்

உறுதி—உறுதியிது முக்காலும் பெண்ணே-நாமும்
உறுதியுடன் சோலையைங் கரநாதன் றன்னை

நேஞ்சுட்—சருதியனு தினம்பூசை செய்வோம்-தேருங்
கல்விநல் லாய்நாமு நல்வாழ்வி னுய்வோம்

சிறந்த—நாச்சிமா நகரில்வளர் சீலன்-கறுப்ப
ன்னுமை வணிகர்தவந் தன்னில்வரு பாலன்

சோல்லு—மாட்சிசேர் முத்தைய னாலை-ஐயன்
மணிமார்பு நூலதா யணிந்தார்தோண் மேலே

வாழி—வாழியைங் கரன்வாழி யீசன்-அம்மை
வாழியா துலகம்மை வாழி முருகேசன்

வாழி—வாழியிவ் வாலநகர் வாழி-யிதனை
வாசித்து மகிழுமதி நேசர்களும் வாழி.

எச்சரிக்கை.

மேலத்தவர் ஞாலத்தினின் வேண்டும்வர மீண்டு
பாலித்தருள் சோலைக்கணபதியே எச்சரிக்கை
நவ நீதியே எச்சரிக்கை

நிகரில்லால நகர்மேவிய நேசாபர மேசன்
மகனே கெஜமுகனே யரிமருகா வெச்சரிக்கை
திண்டோள் முருகா வெச்சரிக்கை

சித்திமாது புத்தியினைச் சேர்ந்தேகளி கூர்ந்த
முத்திக்கொரு வித்தேமறை முதல்வா வெச்சரிக்கை
அம்மை மதலா வெச்சரிக்கை

படிமீதாலங் குடிவாழ்கண பதியே நிறைமதியே
அடியாரவர் மிடிதீர்த்தருள் ஐயா வெச்சரிக்கை
தும்பிக் கையா வெச்சரிக்கை

நீதில்குற மாதைக்குகன் சேர்ந்தேயிட வூர்ந்து
சாதித்தருள் மாதங்கத்தின் தகையே வெச்சரிக்கை
தருவர் பகைவா வெச்சரிக்கை

ஆலநகர்ச் சோலைவிநா யகனே தும்பி முகனே
மேலோர்க்கனு கூலாநுவல் வேதா எச்சரிக்கை
கண நாதா எச்சரிக்கை

ஆகுதனி லேகுந்தொரு நிதி அண்ணவெம தின்னல்
போகும்படி யாகவரம் புரிவா வெச்சரிக்கை
கற்ப தருவே எச்சரிக்கை

சூதக்கனிக் காதித்தேவைச் சுற்றுஞ்சோலை முத்தே
வேதத்துறை நாதாமணி விளக்கே எச்சரிக்கை
தல முழக்கே எச்சரிக்கை.

கட்டியம்.

விண்ணவர் கோமான் நண்ணியே யெவர்க்கும்
வேண்டுவ கொடுக்கும் பாண்டிநன் நாட்டின்
றண்பொழில்தனிற் றும்பிகளிசையாய்த்
தான்முரலால மானகருறைவோன்
சந்திரசேகரர்க்குந் தையல்பார்வதிக்குஞ்
சொந்தக்குமாரனாய்த் துலங்குங்கணபதி
சித்தசனார்க்குந் திசைமுகன்றனக்கும்
மைத்துனனாக வழங்குங்கணபதி
வியனுலகுள்ளோர் வெருவிடாவண்ணங்
கயனைவதைத்துக் காக்குங்கணபதி
வனப்பினளான வள்ளியைக்குகற்குத்
தினைப்புனந்தன்னிற் சேர்க்குங்கணபதி
மாலுக்குமருகன் ஞாலத்துக்கொருவன்
மருவலர்க்கேகன் யிருவர்க்குமோகன்
நற்றவர்சகாயன் சித்தில்மாமாயன்
நல்லார்க்குமித்துரு பொல்லார்க்குச்சத்துரு
அத்திமாமுகமும் வித்துருமமேனியும்
அங்குசபாசமுந் தங்குபேரழகனே
யேழைபங்காளா சோலையைங்கரனே
யிராக்கதர்சூரா பராக்கெச்சரிக்கை.

முற்றிற்று.